செ.வெ.எண்:24 நாள்: 17.12.2018

# பத்திரிக்கைச் செய்தி

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் அங்கன்வாடி மையப்பணியாளர்களுக்கு **ஸ்மார்ட் போன்** (Smart Phone) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி.கே.பழனிசாமி** அவர்களால் இன்று (17.12.2018) வழங்கி துவக்கி வைக்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள 774 அங்கன்வாடி மைய பணியாளர்களுக்கு **ஸ்மார்ட் போன்** (Smart Phone) வழங்கி துவக்கி வைக்கப்பட்டது.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், அரியலூர் மாவட்டத்தில் 774 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் வளர்இளம் பெண்கள், கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். ஊட்டச்சத்து நிலை அடிப்படையில் POSHAN ABHIYAAN திட்டமானது முதல் கட்டமாக அரியலூர், நீலகிரி, விழுப்புரம், சென்னை மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் மார்ச்-8, 2018 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையங்கள் மூலம் பயனாளிகளுக்கு அளிக்கப்படும் சேவையை சிறப்பாக செய்வதற்கும், அங்கன்வாடி பணியார்களிடமிருந்து துல்லியமாக அறிக்கைகளை பெறவும், திட்ட சேவைகளை உரிய நேரத்தில் உரிய பயனாளிகளுக்கு கிடைக்கச் செய்வதற்கும், அங்கன்வாடி பணியாளர்களுக்கு **ஸ்மார்ட் போன்** வழங்கப்பட்டது. ஸ்மார்ட் போன்களில் CAS Application Install செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக அங்கன்வாடி பணியாளர்கள் குடும்ப நிர்வாகம், தினசரி உணவளித்தல், வீடுகள் பார்வைத் திட்டமிடல், வளர்ச்சி கண்காணிப்பு, வீட்டிற்கு கொண்டுச்செல்லப்படும் இணை உணவு, தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய விவரம், அங்கன்வாடி மைய மேலாண்மை, மாதாந்திர முன்னேற்ற அறிக்கை போன்ற அனைத்து பணிகளையும் அங்கன்வாடி பணியாளர்கள் இக்கைபேசி வாயிலாகச் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம்) (பொறுப்பு) புவனேஸ்வரி, உதவித்திட்ட அலுவலர் அன்பரசி, போஸன்அபியான் திட்ட ஒருங்கிணைப்பாளர் பாலசுப்ரமணியன், மாவட்ட திட்ட உதவியாளர் சரவணன் மற்றும் அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**